பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

MALARUM MOTTUKAL

மலர்-1 இதழ்-5 AUGUST 2024

காமராஜரின் 121-ம் ஆண்டு பிறந்தநாள் விழா கொண்டாட்டம்:



"காமராஜர் பிறந்தநாள் ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது"





ஜூலை 15 அன்று கர்மவீரர் காமராஜரின் 121 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தி.நகரில் உள்ள நமது பால மந்திர் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழாவாக கொண்டாடப்பட்டது. மேலும் இந்த விழாவில் காமராஜர் பிறந்த நாள் மற்றும் பால மந்தரின் 75 ஆம் ஆண்டு கொண்டாட்டத்தை மையமாகக் கொண்டு வில்லுப்பாட்டு, நாடகம் மற்றும் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையிலான பல நிகழ்வுகள் நடைபெற்றன.



BALA MANDIR RESOURCE CENTRE

பால மந்திர் வள மையம் (BALA MANDIR RESOURCE CENTRE) நோக்கமானது ஆதரவற்ற, வாய்ப்பு மறுக்கப்பட்ட, உடல் மற்றும் மனநலம் குன்றிய குழந்தைகள், அவர்களின் குடும்பங்கள் தொடர்பான பிரச்சினைகளை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

இந்த மையமானது குழந்தை வளர்ப்பு மற்றும் முழுமையான குழந்தை வளர்ச்சி முறையில் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து, குழந்தையின் உளவியல்-சமூக வளர்ச்சி மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்தி வருகிறது. BMRC வழக்கமாக பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பு முறை மற்றும் சூழலில் உள்ள அனைவருக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இதில் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள், சமூக பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ECCD பயிற்சி நிறுவனங்கள், அரசுத் துறைகள் மற்றும் பலரும் அடங்குவர்.



"மகிழ்ச்சியான குழந்தைப் பருவம் ஒவ்வொரு குழந்தையின் பிறப்புரிமை"

இந்தப் பக்கத்தின் ஆடியோவை கேட்பதற்காக கீழே உள்ள லிங்கை கிளிக் செய்யவும் .

HTTPS://DRIVE.GOOGLE.COM/FILE/D/1UBMZMYW3-YASTNGBFLF2LHB0NDWBYKPK/VIEW?USP=DRIVE_LINK

கின்ஷிப்கேர்

KINSHIP CARE



ஜூலை 2024 முடிவில், கின்ஷிப் கேரில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையத்தில் 821 குடும்பங்களைச் சேர்ந்த 1443 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

ஹேப்பி ரீடிங் பெற்றோர்களுக்கான கூகுள் மீட்:

கின்ஷிப் கேர் -- குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக நிறைய திட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறது. அதில் மிகவும் முக்கியமான ஒன்று ஹேப்பி ரீடிங் திட்டமாகும். இந்த திட்டம் குழந்தைகள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்காகவும் வாசிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் உதவும் ஒரு வகுப்பு. இதில் வெவ்வேறு பகுதியில் உள்ள மற்றும் வெவ்வேறு துறையில் இருக்கின்ற நிறைய தன்னார்வலர்கள் குழந்தைகளுக்கு வகுப்புகளை எடுக்கிறார்கள். ஹேப்பி ரீடிங் பயிற்சி வகுப்பில் பங்கேற்கும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வகுப்பின் நோக்கம் மற்றும் பலன்களை விளக்கும் வகையில் கூகுள் மீட் நடத்தப்பட்டது. இதன் மூலம் பெற்றோர்கள் ஹேப்பி ரீடிங் வகுப்புகளின் முக்கியத்துவத்தை கூடுதலாக அறிந்து கொண்டனர் அதுமட்டுமின்றி குழந்தைகள் மற்றும் பெற்றோரின் பங்கேற்பு வகுப்பில் அதிகரித்து உள்ளது.

KNOW YOUR SOCIAL WORKER

சமூகப் பணியாளர் திரு. பிரதீப்:

திரு. பிரதீப் கின்ஷிப் கேர்- திருவள்ளூர் மாவட்டத்தின் சமூகப் பணியாளர். இவர் சமூகப் பணியில் முதுகலை பட்டமும் (MSW), உளவியல் PSYCHOLOGY முதுகலை பட்டமும் (M.SC) பெற்று இருக்கிறார். இவர் கடந்த 8 ஆண்டுகளாக பால மந்திர் காமராஜ் அறக்கட்டளையில் பணிபுரிந்து வருகிறார். ஆரம்பத்தில் இவர் பால மந்திர் ITI மற்றும் பால மந்திர் பள்ளியில் சமூகப் பணியாளராக பணிபுரிந்தார். பின்னர் கின்ஷிப் கேரில் சமூகப் பணியாளராக சேர்ந்த சிலரில் இவரும் ஒருவர் ஆவார். தற்போது இவர் திருவள்ளூர் மாவட்டத்தில் 72 குடும்பங்களை சேர்ந்த 127 குழந்தைகளுடன் பணியாற்றி வருகிறார்.



HAPPINESS IS ALL ABOUT, SERVING THE DESERVING

-PRADEEP

புதிய வகுப்புகள் - New Class.



NMMS சிறப்பு பயிற்சித் திட்டம்:

பெங்களூரைச் சேர்ந்த தன்னார்வலர் தொண்டு நிறுவனமான சாத்தி - Saathi உடன் இணைந்து அரசுப் பள்ளிகளில் படிக்கும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி உதவித்தொகை தேர்வு (NMMS) சிறப்பு பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. டிசம்பர் 2024 இல் நடத்தப்படும் NMMS தேர்விற்காக ஜூலை மாதம் முதல் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

கின்ஷிப் கேரை சேர்ந்த 8 மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்கிறார்கள். இந்த மாணவர்கள் 7 நாட்களும் ஆன்லைன் வகுப்புகளில் கலந்து கொள்வதையும், வீட்டுப்பாடங்களை சரியான நேரத்தில் முடிப்பதையும் உறுதி செய்யுமாறு பெற்றோர்கள் பராமரிப்பாளர்களை கின்ஷிப் கேர் கேட்டுக்கொள்கிறது. மாணவர்கள் இப்பயிற்சியை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு NMMS தேர்வில் தேர்ச்சி பெற கின்ஷிப் கேரின் வாழ்த்துக்கள்.

இந்தப் பக்கத்தின் ஆடியோவை கேட்பதற்காக கீழே உள்ள லிங்கை கிளிக் செய்யவும் .

https://drive.google.com/file/d/1vuykujeWcGX9pU1ZXb5WVoZKHXTIGfcH/view?usp=drive_link

கின்ஷிப்கேர்

KINSHIP CARE

பெற்றோருக்கான பகுதி Parent's Corner

குழந்தைகள் முன் நாம் பேசக்கூடிய வார்த்தைகளை கவனமாக பேச வேண்டும். ஏனென்றால் குழந்தைகள் பெற்றோர் மற்றும் அவர்களை சுற்றி உள்ள நபர்களிடமிருந்து தான் அனைத்து தகவல்களையும் கற்றுக் கொள்கிறார்கள்.

ஒப்பிட்டு பேசுதல்: நம் குழந்தையை இன்னொரு குழந்தைகளுடன் அதாவது, அது உங்கள் வீட்டு குழந்தையாக இருந்தாலும் சரி மற்ற குழந்தைகளாக இருந்தாலும் சரி ஒப்பிட்டு பேசாதீர்கள். இதனால் குழந்தைகளுக்கு தன் மீது தாழ்வு மனப்பான்மையும், மற்றவர்கள் மீது வெறுப்பும் ஏற்படக்கூடும்.



சிறப்பு பயிற்சி வகுப்புகள்:



குழந்தைகள் பள்ளி படிப்பை முடித்த பிறகு அவர்களின் மேல் படிப்பிற்கான தொழில் முறை கல்வியின் (DOCTOR, ENGINEER, LAWYER, CA-ACCOUNTANT) நுழைவு தேர்வுகளை எளிதில் எதிர்கொள்வதற்காக AHAGURU என்ற கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஏழு மற்றும் எட்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு கின்ஷிப் கேர் பயிற்சி அளிக்க சிறப்பு வகுப்புகள் தொடங்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் மாத இறுதியில் இந்த வகுப்புகள் தொடங்க உள்ளது என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இளம் சாதனையாளர்கள்


YOUNG ACHIEVERS



என்னிந்திய அளவிலான கராத்தே போட்டி - கீதா ஸ்ரீ 3வது பரிசையும், மோனேஷ் 1வது பரிசை வென்றனர் (காஞ்சிபுரம்).



வி. தன்ஷிகா (காஞ்சிபுரம்)
சுதந்திர தினக் கொடி உரை



ஹெவந்திக (காஞ்சிபுரம்)
ஓவியப்போட்டி.



நேரம் தவறாமை எனும் கருவியை பயன்படுத்துபவன் எப்போதும் கதாநாயகன் தான்
-காமராஜர்.

இந்தப் பக்கத்தின் ஆடியோவை கேட்பதற்காக கீழே உள்ள லிங்கை கிளிக் செய்யவும்👇.

https://drive.google.com/file/d/13GDNSUech8KQ78nYqdGe4_MNyF00Oibp/view?usp=drive_link

YOUNG ACHIEVERS

இளம் சாதனையாளர்கள்



சாய் சரண் (கிருஷ்ணகிரி)
பார்ட்டிசிபேட் மினி மாரத்தான்.



தருண் (திருவள்ளூர்)
கராத்தே போட்டி.



திருனீஸ்வரன் சாய் (திருவள்ளூர்)
நடன போட்டி.



வர்ஷினி (திருவள்ளூர்)
கராத்தே போட்டி.



மனிஷா (திருவள்ளூர்)
தமிழ் ஹேண்ட் ரைட்டிங் (எழுத்து)
போட்டி.



தருண் ராஜ் (திருவள்ளூர்)
கராத்தே போட்டி.



க்ரிஷாந்த் (சேலம்)
ஓவியப்போட்டி.



சஞ்சித் (ஈரோடு)
ஓவியம் மற்றும் கட்டுரை போட்டி.



மனிஷா & சுதர்சன் (நாமக்கல்)
தேசிய அளவிலான கராத்தே போட்டி

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!